# மழை நாள்

ஒரு நாட் காலை வானம் இருண்டு காணப்பட்டது. குளிர்காற்று வீசியது. திடீரென மின்னல் மின்னியது. அதைத் தொடர்ந்து இடிமுழக்கம் மழைத்துளிகள் மெல்லமெல்லத் தூறத் தொடங்கின. வீதிகளில் நடந்து சென்று கொண்டிருந்த மக்கள் மழை வருவதற்குள் தங்கள் இடங்களுக்குச் செல்லவேண்டுமென்ற துடிப்புடன் விறுவிறு என நடந்து சென்று கொண்டிருந்தனர். கார்முகிலைக் கண்ட மயில்கள் மகிழ்வில் திளைக்கின்றன. ஆண்மயில்கள் தங்கள் அழகிய தோகையை விரித்து ஆலத் தொடங்கின. குயில்களின் கூவல்கள் மயில்களின் ஆடலுக்கான இனிய இசையாக ஒலித்தன. அப்போது சோ என்ற இரைச்சலுடன் மழை கொட்டத் தொடங்கியது.

வெளியே குடையுடன் சென்றவர்கள் குடையை விரித்து மழையில் நனையாது மெதுவாக நடந்துகொண்டிருந்தனர். ஏனையோர் மழையில் நனைந்தவாறு ஓடிஓடிச் சென்று அண்மையிலுள்ள கட்டிடங்களில் ஒதுங்குகின்றனர். அவர்கள் நனைந்த ஆடைகளுடன் மழைக்குளிரில் நடுங்கினர். பலத்த மழையினால் வீதிகளெங்கும் வெள்ளம் ஓடிக்கொண்டே இருந்தது. அங்காடியில் விற்பனையாளர்கள் தங்கள் தங்கள் பொருட்களை விரைவாகச் சுருட்டிக் கட்டிக்கொண்டு தமது நிலையை எண்ணி ஏக்கத்துடன் ஒதுங்கி நிற்கின்றனர். அக்காலைப் பொழுதில் பள்ளி செல்லும் மாணவர்கள் பள்ளிப்பைகளுடன் கூச்சலிட்டுக் கொண்டு அங்கும்இங்கும் ஓடி மறைகின்றனர். இவ்வாறு அனைவரது செயற்பாடுகளும் சில மணிநேரம் முடங்கின.

சோ வென்று பெய்த மழை படிப்படியாகக் குறையத் தொடங்கியது. வானம் வெளுத்தது. ஒவ்வொருவரும் தடைப்பட்ட தங்களது செயற்பாடுகளை மீண்டும் தொடங்குகின்றனர். வீதிகளில் ஓடிக்கொண்டிருந்த

வெள்ளத்தில் உந்துகள் ஊந்துஊந்து செல்லத்தொடங்கின. வாடிக்கிடந்த நிலைத்திணைகள் தலை நிமிர்ந்து செழித்துக் காணப்படுகின்றன. வயல்களுக்கு வேண்டிய நீரைக் கதிரவன் வழங்கியதை எண்ணி மகிழ்ந்தவாறு உழவர்கள் வயலோரம் நடந்து நெற்பயிர்களைச் சுற்றிசுற்றிப் பார்க்கின்றனர். ஆம் மழை இன்றேல் இவ்வுலகில் எவ்வுயிர்களும் உயிர் வாழ முடியாதுதானே.